11 ஆம் வகுப்பு

# முதல் திருப்புதல் தேர்வு – 2024

00113118

## வரலாறு

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள்: 90

20 x1= 20

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக

1. எழுத்துக்கள் அறிமுகமாவதற்கு முந்தைய காலகட்டம் ______ எனப்படுகிறது.
அ) வரலாற்றுக்கு முந்தைய காலம் ஆ) வரலாற்றுக்காலம்
இ) பழங்கற்காலம் ஈ) புதிய கற்காலம்

2. பழங்கற்கால கருவிகள் முதன்முதலில் _____ ல் அடையாளம் காணப்பட்டன
அ) 1880 ஆ) 1863 இ) 1873 ஈ) 1883

3. கீழ்காணும் இணைகளை கவனிக்கவும்
(i) சேனானி - படைத்தளபதி
(ii) கிராமணி - கிராமத் தலைவர்
(iii) பலி - தன்னார்வத்தால்
(iv) புரோகிதர் - ஆளுநர்
மேற்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
அ) i ஆ) ii இ) iii ஈ) iv

4. மெகஸ்தனிஸ் எழுதிய எந்த நூல் சந்திர குப்தரின் அரசவையையும் அவரது நிர்வாகத்தையும் விவரிக்கிறது.
அ) முத்ராராட்சசம் ஆ) இண்டிகா இ) அஷ்டத்யாயி ஈ) அர்த்தசாஸ்திரம்

5. மேல் கங்கைச் சமவெளி பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) குரு-பாஞ்சாலம் ஆ) கங்கைச் சமவெளி இ) சிந்து சமவெளி ஈ) விதேகா

6. கீழ்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
(i) தலையாலங் கானம் - நெடுஞ்செழியன்
(ii) பட்டினப்பாலை - உருத்திரங் கண்ணனார்
(iii) கஜபாகு - இலங்கை
(iv) திருவஞ்சிகளம் - சோழர்
அ) i ஆ) ii இ) iii ஈ) iv

7. இந்தோ-கிரேக்க அரசர்களில் நன்கு அறியப்பட்டவர் யார்?
அ) யூதிடெமஸ் ஆ) டெமெட்ரியஸ் இ) மினாண்டர் ஈ) ஆண்டியால்டஸ்

8. பொருத்துக
எழுதியவர் இலக்கியப்படைப்பு
(i) தன்வந்திரி - 1. சூரிய முத்தாந்தம்
(ii) வராஹமிகிரா - 2. அமர கோஷா
(iii) ஆர்யப்பட்டர் - 3. பிருஹத்சம்ஹிதா
(iv) அமர சிம்மர் - 4. ஆயுர் வேதா
அ) 4,3,1,2 ஆ) 4,1,2,3 இ) 4,2,1,3 ஈ) 4,3,2,1

9. கீழ்கண்டவற்றுள் தவறானது எது?
அ) கௌடபாடர் ஆகம சாத்திரத்தை இயற்றினார்
ஆ) மகிபாலர் கீதங்கள் வங்காள கிராமத்தில் பாடப்படுகின்றன
இ) தர்மபாலர் ரோமில் மிகப்பெரிய விகாரத்தை கட்டினார்
ஈ) இராமபாலர் இராமசரிதத்தை எழுதினார்

10. காம்போஜம் என்பது நவீன ______
அ) அஸ்ஸாம் ஆ) சுமத்ரா அ) ஆனம் ஈ) கம்போடியா

11. பாலம் பவோலி கல்வெட்டு எந்த மொழியில் உள்ளது?
அ) சமஸ்கிருதம் ஆ) பாரசிகமொழி இ) அரபி ஈ) புகார்

12. கீழ்கண்டவற்றில் எது பாண்டியர்களின் முதல் தலைநகரமாகும்?
அ) மதுரை ஆ) காயல்பட்டினம் இ) கொற்கை ஈ) புகார்

13. விஜய நகர அரச முத்திரை
அ) புலி ஆ) மீன் இ) பன்றி ஈ) வில்

14. அக்பரின் அரசவையில் ஆக்ராவின் பார்வைத் திறனற்ற பாடகர் என்று அறியப்பட்டவர்
அ) சூர்தாஸ் ஆ) துக்காரம் இ) இராமனுந்தர் ஈ) மீராபாய்

15. வலிமை மிக்க கொரில்லா போர் முறையை பின்பற்றியவர் யார்?
அ) முகலாயர் ஆ) மராத்தியர் இ) ஆங்கிலேயர் ஈ) நாயக்கர்

16. 1526 ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாம் பாணிப்பட் போரில் பாபர் ____ யை திறம்பட பயன்படுத்தி வெற்றி பெற்றார்
அ) காலாட்படை ஆ) குதிரைப்படை இ) பீரங்கிப்படை ஈ) யானைப்படை



CamScanner
Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com

17. ஏழாண்டுப்போர் ______ யுடன் முடிவுக்கு வந்தது
அ) புதுச்சேரி உடன்படிக்கை ஆ) அலகாபாத் உடன்படிக்கை
இ) பாரிஸ் உடன்படிக்கை ஈ) ஸ்ரீரங்கப்பட்டினம் உடன்படிக்கை
18. வங்காளத்தில் இரட்டை ஆட்சியை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) வாரன் ஹேஸ்டிங்ஸ் ஆ) டியூப்ளே இ)காரன்வாலிஸ் ஈ) இராபர்ட்கிளைவ்
19. கூற்று : சையது அகமதுகான் அலிகாரில் நிறுவிய நவீன பள்ளி பின்னர் முகமதிய ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது
காரணம் : முஸ்லீம்கள் ஆங்கிலக் கல்வி கற்பதை அவர் விரும்பினார்
அ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம்
ஆ) கூற்று தவறு காரணம் சரி
இ) கூற்று மற்றும் காரணம் இரண்டுமே தவறானது
ஈ) கூற்று சரி, காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல
20. கோல் எழுச்சிக்குக் காரணமானவர் ______ ஆவார்
அ) சிடோ அ) பின்த்ராய் மன்கி இ) புத்தபகத் ஈ) கானு

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு மட்டும் விடையளி - (வினா எண் 30 கட்டாயம்) 7 x 2= 14**

21. ஜெனட் அவஸ்தா பற்றி எழுதுக.
22. மகாவீரருடைய போதனைக்காரின் மையக்கருத்து என்ன?
23. மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையை ஏன் திருப்பி தந்தார்?
24. அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய இராமானுஜர் பங்களிப்பை குறிப்பிடுக?
25. அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்து எழுதுக.
26. பாண்டிய அரசின் மீதான மாலிக்காபூரின் படையெடுப்பின் விளைவுகள் யாவை?
27. சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக?
28. 1773 ம் ஆண்டு ஒழுங்குமுறை சட்டத்தை விவரி?
29. இராமலிங்க அடிகளார் பற்றி நீவிர் அறிவன யாவை?
30. ஒப்பந்தக் கூலிமுறையை பற்றி எழுதுக?

**III. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி : (வினா எண் 40 கட்டாயம்) 7 x 3 = 21**

31. ரிக்வேதகால சமூக பிரிவுகளை கோடிட்டு காட்டுக.
32. ஆனந்தரங்கர் நாட்குறிப்பு எழுதுக?
33. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவம் விவரிக்கவும்.
34. எல்லோரா மற்றும் எலிஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள் யாவை?
35. மாலிக்காபூரின் தென்னாந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.
36. பாமினி அரசு எவ்வாறு நிறுவப்பட்டது? யாரால் நிறுவப்பட்டது?
37. "தீன் இலாகி" பற்றி நீவிர் அறிவது யாது?
38. கிழக்கு கடற்கரையில் ஐரோப்பியர் தங்களது குடியேற்றங்களை நிறுவக் காரணம் என்ன?
39. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?
40. சுவாமி விவேகானந்தர் குறிப்பு.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7 x 5 = 35**

41. அ) வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக (அல்லது)
ஆ) வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
42. அ) மௌரியப் பேரரசு பற்றி அறிய உதவும் சான்றுகள் பற்றி விளக்கவும் (அல்லது)
அ) பொ.ஆ.1ம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்து விவரங்கள் தருக.
43. அ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?
(அல்லது)
ஆ) குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் விவரிக்கவும்.
44. அ) ஹர்ஷவர்தனர் பேரரசின் எல்லைகளை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்
(i) தானேசுவரம் (ii) இந்திரபிரஸ்தம் (iii) கன்னோசி (iv)நாளந்தா (v) புத்தகயா
(அல்லது)
ஆ) மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்களின் கட்டடக்கலை மேன்மைகளை விளக்குக?
45. அ) முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றி குறிப்பு வரைக.
(அல்லது)
ஆ) பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக?
46. அ) வெல்லஸ்லி அறிமுகப்படுத்திய துணைப்படைத் திட்டத்தினைப் பற்றி விவரி (அல்லது)
ஆ) முகலாய அரசர்களின் காலவரிசையை காலக்கோட்டு காட்டுக?
47. அ) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்தது? (அல்லது)
ஆ) 1806 வேலூர் புரட்சியின் காரணம் விளைவுகள் பற்றி எழுதுக.



CamScanner

Kindly Send me your Answer Keys to email id - Padasalai.net@gmail.com